**நாள்: 24.07.2026**

O.S.No.133/2025

DW2. பெயர்: சக்திவேல்

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**குறுக்கு விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 – ஈடுகடன் பத்திரம் தான் வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த பத்திரம் என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட ஈடுகடன் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் ரூ.30லட்சத்திற்கு ஈடுகடன் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளதென்றால் சரிதான். 23.04.2021ம் தேதியன்று வாதிக்கு, பிரதிவாதி எவ்வித ஒத்தி பத்திரமாக எந்தவித ஆவணமும் எழுதித்தரவில்லை என்று சொன்னால் சரிதான். ஒத்தியாக ரூ.33 லட்சம் பேசி, ரூ.30லட்சத்தை அசலாகவும், ரூ.3லட்சம் வட்டியாகவும் பேசப்பட்டதென்றால் சரிதான்.

2. ஈடுகடன் பத்திரத்தில் ஒத்தி என்ற வாசகம் ஏதும் இல்லை என்றால் சரிதான். ஈடுகடன் பத்திரத்தின் அடிப்படையில் ரூ.30 லட்சம் கொடுத்ததாகத்தான் எழுதப்பட்டுள்ளதென்றால் சரிதான். ஈடுகடன் பத்திரத்திற்கு அசல் ரூ.100க்கு மாதம் ரூ.1வட்டி என பேசப்பட்டு எழுதப்பட்டதென்றால் சரிதான். ஈடுகடன் பத்திரத்தின் படி பதிவு ஆவணம் ஏதும் எழுதவில்லை என்றால் சரிதான்.

3. உழவடை பத்திர ஒப்பந்தமானது ரூ.100 பத்திரத்தில் எழுதப்பட்டது. அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். மேற்கண்ட ஆவணத்தில் ஈடுகடன் சொத்தை வட்டிக்காக அனுபவித்து வருவதாக ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளதென்றால் சரிதான். ரூ.100 பத்திரத்தில் எழுதப்பட்டதாக சொல்லும் உழவடை ஒப்பந்தத்தின் பத்திர எண் பற்றி எனக்கு தெரியாது. நானும், பிரதிவாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள், நன்கு பழக்கப்பட்டவர்கள் என்றால் சரிதான். ரூ.100 பத்திரத்தாளில் எழுதப்பட்ட ஒப்பந்தத்தை தவிர நான் வேறு ஒப்பந்தம் ஏதும் எழுதவில்லை.

4. நான் பிரதிவாதிக்கு வேண்டியவர் என்பதால், பிரதிவாதி சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன வாக்குமூலத்தின் படி ரூ.100 பத்திரம் ஏதும் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.24 15:51:06 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.